சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
**OS.No. 1294 / 2022**
**and**
**OS.No.1367/2022**

வா.சா.1. ராமஅருள்அரசன் 05.11.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

வா.சா.ஆ.1-ன் படி அதில் கண்ட சொத்துக்களை எனது தகப்பனார், எனது பெரிய தகப்பனார், எனது பாட்டனார், எனது பெரிய பாட்டனார் சேர்ந்து இந்த பிரதிவாதிகளின் தாயார் யசோதையம்மாள், தகப்பனார் ராமசாமி, தகப்பனார் பாட்டி பெரியபழனியம்மாள் ஆகியோர்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் கண்ட யசோதையம்மாள் எனது அப்பாவுடன் பிறந்த சகோதரி. அவர் எனக்கு அத்தை. அதில் கண்ட பெரிய பழனியம்மாள் எனது தகப்பனாரின் அத்தை என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் ஜமீன் பைமாஸ் எண் குறிப்பிட்டு குழி கணக்கின் அடிப்படையில் 3 குழிகள் நீங்கலாக என குறிப்பிட்டு சொத்து விபரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் அந்த மூன்று குழி எங்களது சொத்து என்றோ நாங்கள் வைத்துக்கொள்ளகூடிய சொத்து என்றோ குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. அது அவருடைய சொத்து என்பதால் அது கழித்து எழுதப்பட்டுள்ளது. அதனால் குறிப்பிட்டு எங்கள் நிலம் என்று சொல்லப்படவில்லை. அந்த 3 குழி நிலம் ஏற்கனவே இந்த பிரதிவாதிகளின் பாட்டனாருக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் எங்கள் பாட்டனாருக்கு அந்த 3 குழி பாத்தியம் என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3 குழி சொத்து என்பதற்கு நான்குமால் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சொல்லப்பட்டுள்ளது. அதே தேதியில் எனது தகப்பனார் மற்றும் பாட்டனார் வா.சா.ஆ.2-ன் மூலமாக பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாக பிரிவினை பத்திரத்தில் 3 குழி சொத்து தாவா சொத்து எந்த சர்வே எண் என்றோ மற்றும் நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பாக பிரிவினை பத்திரத்தில் பிரதிவாதிகளோ அவர்களது முன்பாத்தியஸ்தர்களோ தரப்பினர்கள் அல்ல என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.2 பாக பிரிவினை பத்திரம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3-ன் மூலம் எனது பாட்டனாரும் எனது தகப்பனாரும் எனது பெரிய தகப்பனாரும் 01.11.1958-ம் தேதி அவர்களது சொத்துக்களை அவர்களுக்குள் பாக பிரிவினைசெய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் 8-வது பக்கத்தில் இனிமேல் நமக்குள் உயில் சொந்தங்கள் தவிர பொருள் சொந்தம் ஏதும் இல்லை என கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த பத்திரத்தில் 4-வது பக்கத்தில் 3 குழி நீங்கலாக என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த

வா.சா.ஆ.3 பத்திரத்திலும் 3 குழி நிலத்திற்கு சர்வே எண்ணோ நான்குமாலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த 3 குழி நிலம் பிரதிவாதிகளின் பாட்டனாருக்கு பூர்விக வழியில் பாத்தியப்பட்ட நிலங்கள் என்பதால் தான் எங்களது பத்திரத்தில் சர்வே எண்ணோ நான்குமாலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு 1984-ல் இந்த பிரதிவாதிகளும் அவர்களது தாயார் மற்றும் தகப்பனாரும் தாவா சொத்துக்கள் உள்ளிட்ட அவர்களது குடும்ப சொத்துக்களை பதிவு பெற்ற பாக பிரிவினை மூலம் பாகம் பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த பாக பிரிவினை தாவா சொத்துக்களை பொறுத்து எங்களை கட்டுப்படுத்தாது. இந்த பத்திரத்திற்கு பிறகு தான் எனது தகப்பனார், எனது பெரிய தகப்பனாரிடமும் எனது பெரிய பாட்டனார் மகனிடமும் தாவா சொத்துக்களை பற்றி மட்டும் 30.07.1985-ம் தேதி எனது தகப்பனாருக்கு ஒரு விடுதலை பத்திரம் எழுதி தாவா சொத்தை மட்டும் பாத்தியப்படுத்தி வைத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் முந்தைய பாகம் எனது தகப்பனாருக்கு தெரியவரவில்லை. 1984-ல் பிரதிவாதிகள் செய்து கொண்ட பாக பிரிவினையை தெரிந்து கொண்டு அதற்கு விரோதமாக வா.சா.ஆ.4 விடுதலை பத்திரத்தை எங்களுக்குள் எங்களது தகப்பனார் பெயருக்கு ஏற்படுத்தி வைக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள்து தகப்பனாருக்கு விடுதலை பத்திரம் எழுதி வைத்த பெரிய பாட்டனார் மகன் பெ.ராமசாமி. மேற்படி பத்திரத்தில் எழுதி வைத்த இன்னொரு நபர் எனது பெரிய தகப்பனார் ராமச்சந்திரன் என்றால் சரிதான். எனது பெரிய தகப்பனாருக்கு அப்போதே ஒரு ராஜேந்திரன் என்ற மகன் இருந்தார் என்றால் சரிதான். எனது பெரிய பாட்டனார் மகன் ராமசாமிக்கு இரண்டு மனைவிகள். இருவருக்கும் ஆண் மக்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது வழக்கின் படி தாவா சொத்துக்கள் எனது பாட்டனார் மற்றும் முப்பாட்டனாருக்கு பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான். அதனால் ராமச்சந்திரனின் மகனுக்கும் ராமசாமியின் ஆண் மக்களுக்கும் வா.சா.ஆ.4 எழுதி வைத்த காலத்திலேயே இந்து வாரிசுரிமை சட்டம் 30/1956 படி சம உரிமை இருந்தது என்றால் சரியல்ல. நான் அடிப்படை சட்டம் தெரிந்துகொண்டே வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பெரிய பாட்டனாரின் சிவகிரி பழனிசாமியின் ஒரு மனைவி பெயர் அழமேலுஅம்மாள் என்றால் சரிதான். அவர்கள் இந்த 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் ராமசாமியின் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு 3 கிராமங்களில் மொத்தமாக 100 ஏக்கருக்கு மேல் சொத்து இருந்தது என்றால் சரிதான். சிவகிரி பழனிச்சாமி கவுண்டர் தனது மனைவி அழமேலம்மாளுக்கு சில சொத்துக்களை வாழ்க்கை பொருளுதவிக்காக செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அவர் இறந்தபின்பு அவரது மகன் ராமசாமி அந்த சொத்துக்கள் அவருக்கு பாத்தியம் என்று சொல்லி இந்த பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்து வழக்கை நடத்தினார் என்றால் எனக்கு தெரியாது. எனது பெரியப்பா ராமச்சந்திரன் சொத்துக்களை

பைசல் பேசி இந்த வழக்கை சமரசமாக முடிக்க சொல்லி பிரதிவாதியிடம் சொல்லியும் சொத்துக்களை அழமேலம்மாளுக்கு விட்டுவிட வேண்டும் என்று சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது பெரியப்பா ராமசந்திரன் குடும்பத்தில் மூத்தவர் என்ற முறையில் எங்கள் வகையறா மற்றும் பிரதிவாதிகள் வகையறா குடும்பங்களுக்கு அறிவுரை செய்து வழிநடத்தி வந்தார் என்றால் தெரியாது மற்றும் தவறு. அந்த வழக்கு 1983-ம் ஆண்டு ஆரம்பித்து பிரதிவாதிகளுக்கும் ராமசாமிக்கும் இடையே நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. இந்த பிரதிவாதிகளுக்கு எனது பெரியப்பா சொன்ன புத்திமதியை கேட்காத காரணத்தினால் தான் அவருடைய ஏற்பாட்டின் பேரில் வா.சா.ஆ.4 விடுதலை பத்திரம் என் தகப்பனார் பெயருக்கு எழுதி வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த விடுதலை பத்திரத்தில் ராமச்சந்திரகவுண்டருக்கும் ராமசாமிக்கும் அந்த சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்ற வழிமுறை சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1956 சர்வே செட்டில்மெண்ட் அமுலுக்கு வருவதற்கு முன்பு தாவா சொத்துக்கள் மற்றும் அங்கு உள்ள கிராம சொத்துக்கள் ஜமீன் பைமாஸ் எண்கள் குறிப்பிட்டு ஜமீன் பட்டா தான் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. இந்த சொத்துக்களுக்கு முன் பத்திரம் இருக்காது என்றால் இருக்கலாம் தேடிப்பார்க்கவில்லை. தாவா சொத்து உள்ளிட்ட பிரதிவாதிகளின் குடும்ப சொத்துக்கள் ஜமீன் பட்டா, பட்டா விசாரணை அறிவிப்பு பிரதிவாதியின் தகப்பனார் பெயருக்கு தான் கொடுக்கப்பட்டதாக சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. அப்படியே இருந்தாலும் அது தாவா சொத்துக்களை பொறுத்து அது கட்டுப்படுத்தாது. எனது பெரிய பாட்டனார் சிவகிரி பழனிச்சாமி கவுண்டர் அந்த பகுதியில் உள்ள 4, 5 கிராமங்களுக்கும் கிராம தலைவராக இருந்தார் என்றும் தொடர்ச்சியாக ஜில்லா போர்டு உறுப்பினராகவும் இருந்து வந்தார் என்றால் நேரடியாக எனக்கு தெரியாது. நான் கேள்விபட்டுள்ளேன். சர்வே செட்டில்மெண்ட் நடந்த போது அவருக்கு தெரியாமல் எதுவும் நடந்திருக்காது என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்து உள்ளிட்ட சர்வே எண்.54 சொத்து முழுவதற்கும் ரெவன்யூ பட்டா, பட்டா பாஸ்புத்தகம் ஆகியவற்றில் இந்த பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமிகவுண்டர் பெயர் தான் பதிவு ஆகி தொடர்ச்சியாக இருந்து வந்தது என்றால் இருந்திருக்கலாம். ஆனால் இந்த தாவா சொத்தை பொறுத்து அது எங்களை கட்டுப்படுத்தாது. 22.06.1976-ல் தாவா சொத்துக்களையும் சேர்ந்து இந்த பிரதிவாதிகளும் அவர்களது தாயார் மற்றும் சகோதரிகளும் ஒரு செல்லப்பன் என்பவருக்கு ஈடு பத்திரம் கொடுத்துள்ளார் என்றால் அது எங்களை கட்டுப்படுத்தாது. மேற்படி செல்லப்பன் 24.04.1978-ல் ஒரு குப்புச்சாமி செட்டியார் என்பவருக்கு பதிவு பெற்ற மேடு ஓவர் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அவ்வாறு எழுதிக்கொடுத்திருந்தாலும் அது எங்களை கட்டுப்படுத்தாது. இந்த வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகளும் அவரது தாயாரும் 10.07.1984-ம் தேதி பாக பிரிவினை

செய்து கொண்ட போது இந்த பிரதிவாதிகள் இருவரும் ஆளுக்கு 90 செண்ட் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்படியே பாக பிரிவினை செய்து கொண்டாலும் அந்த பாக பிரிவினை எங்களை கட்டுப்படுத்தாது. பாக பிரிவினையிலும் ஈடு பத்திரங்களிலும் இந்த சொத்துக்களுக்கு மேற்கு மாலாக நீலவரதப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீலவரதப்பநாயக்கருக்க இந்த பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு கடன் அதிகமானதால் தான் தாவா சொத்திற்கு மேல்புறம் உள்ள சொத்தை பிரதிவாதிகளுக்காக எனது பெரிய தகப்பனார் ராமசந்திரகவுண்டர் முன்னின்று கிரையம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதிகளின் தகப்பனார் ராமசாமி கவுண்டர் ஆஸ்துமா நோயாளியாக இருந்து இறந்துபோய்விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அவர் இறந்துவிட்டார். ஆனால் அவர் இறந்த பின்பு தான் தாவா சொத்திற்கு மேல்புறம் உள்ள சொத்தை நீலவரதப்பநாயக்கருக்கு பிரதிவாதிகளும் அவர்களது தாயாரும் கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அப்போது எங்கள் குடும்பத்திற்கு மூத்தவர் எனது பெரியப்பா தான் என்றும் அதனால் அவரது வகையறா சொத்துக்களை மால்களாக குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் இரண்டு உட்பிரிவுகள் ஏற்பட்டு இரண்டு உட்பிரிவுகளின் அடிப்படையில் உள்ளது என்றால் சரிதான். ஒரு உட்பிரிவு சேனாதிபதி பெயருக்கும் மற்றொரு உட்பிரிவு குணசேகரன் பெயருக்கும் ஏற்பட்டது என்றால் தவறு, எனக்கு தெரியாது. நினைவு இருந்த காலத்தில் இருந்து தாவா சொத்துக்களுக்கான பட்டா பிரதிவாதிகள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு அவர்கள் பெயருக்கு தான் பட்டா ஏற்பட்டு அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் பெயருக்கு நாங்களாக ஏற்படுத்திக் கொண்ட பத்திரங்களை தவிர தாவா சொத்துக்களுக்கு பட்டா, அடங்கல், கிஸ்தி ரசீதுகள் ஏதும் இல்லை என்று சொன்னால் தவறு. பிரதிவாதிகள் பெயருக்கு பட்டா இருப்பது தெரிந்தது தான் எனது தகப்பனார் அவரது பெயருக்கு பட்டா மாறுதல் செய்து தரச்சொல்லி வட்டாச்சியர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் நில நிர்வாக அலுவலர் சென்னை ஆகிய இடங்களில் வழக்கு நடத்தி வந்தார் என்றால சரிதான். ஆனால் செட்டில்மெண்ட் படி எங்களது சொத்து என்பதன் அடிப்படையில் வழக்கு நடத்தினார். 1986-ம் ஆண்டே இந்த பட்டா மாறுதல் நடவடிக்கை நடைபெற்றது என்றால் சரிதான். ஆக இந்த சொத்துக்களுக்கான தாவா 1986-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கிஸ்தி ரசீதுகள் அனைத்தும் இந்த தாவாவிற்கு பிந்தைய ஆவணங்கள் என்றால் சரிதான். 1987-ல் பட்டா எங்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டதால் இந்த வரி ரசீதுகளை செலுத்தி வந்தோம். சொத்துக்களுக்கான கிஸ்தி யார் பெயரில் யார் வேண்டுமானலும் செலுத்தலாம் என்றால்

சரிதான். வரி ரசீதுகள் அனைத்தும் எனது தகப்பனார் ஏற்படுத்திக் கொண்ட ரசீதுகள் என்றால் சரியல்ல. தொடர்ச்சியாக இன்று வரைக்கும் குப்பமுத்து கவுண்டர், ராமசாமி கவுண்டர், சேனாதிபதி வகையறா தான் இன்று வரை பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது குடும்பமும் பிரதிவாதிகள் குடும்பமும் ஊரில் பெரிய குடும்பங்கள் என்றால் சரிதான். மூன்று தலைமுறையாக இருகுடும்பத்திற்கும் இடையே பெண் கொடுத்து பெண் எடுப்பது வழக்கமாக இருந்து வந்தது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் மூதாதையர்கள் வாழ்ந்து இறந்துபோனவர்களை எங்களுடைய சொந்த இடமான தோட்டத்தில் வைத்து சமாதி வைப்பது என்றால் சரியல்ல. எனது முப்பாட்டன் ராமசாமி சமாதி, ராமசாமி மனைவிகள் காளியம்மாள், மங்கம்மாள், சிவகிரி பழனிச்சாமி கவுண்டர் மனைவி மங்கம்மமாள் ஆகியோர்களது சமாதி எங்கள் தோட்டத்தில் தான் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோன்று வழக்கு போட்டுள்ள சொத்தின் ஒரு பகுதியில் பிரதிவாதியின் பாட்டனார் குப்பமுத்து சமாதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போதும் அந்த சமாதி இருந்து வருகிறது என்றும் அந்த பிரதிவாதிகள் ஆண்டுக்கு ஒரு முறை தெவசம், அம்மாவாசை மற்றும் கிருத்திகை நாளில் வழிபாடு செய்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் மூதாதையர்கள் சமாதியிலும் நாங்களும் அதுபோல் வழிபாடு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அவ்வாறு சமாதி உள்ளது என்று தற்போது உள்ள விஞ்ஞான முறைப்படி ஆய்வு செய்து பார்க்கலாம் என்றால் பார்க்கலாம். தாவா சொத்துக்களில் குப்பமுத்து கவுண்டரின் சமாதி இருக்கிறது என்றும் அது அவர்களது சொத்து என்பதால் அதில் சமாதி வைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த சொத்துக்கள் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் இந்த சொத்துக்களில் எங்களுடைய பெரியப்பாமகன் மற்றும் பெரிய பாட்டனார் மகன் ராமசாமியின் மக்கள் ஆகியோரையும் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு சேர்த்து தாக்கல் செய்யாத இந்த தாவா நிலைநிற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 விடுதலை பத்திரம் எனது பெரிய தகப்பனாரும் எனது பெரிய பாட்டனார் மகன் ராமசாமியும் அவர்களது பூர்விக பாத்தியப்பட்ட சொத்துக்களை என் தகப்பனாருக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்ததாகும் என்று சொன்னால் சரிதான். அந்த பத்திரத்தில் மேற்படியார்களின் ஆண் மக்களை தரப்பினராக சேர்க்காமலும் அவர்களை கட்டுப்படுத்தாமலும் எனது தகப்பனாருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும் அந்த பத்திரம் எனது தகப்பனாருக்கு தாவா சொத்து எவ்வித உரிமையும் கொடுக்காது என்றும் அதன் அடிப்படையில் தாவாசொத்துக்களில் உரிமை கோரி நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த தாவா சொத்துக்களில் எங்களுக்கே உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த இடத்தில்

சொத்துக்களுக்கு பலமடங்கு விலை உயர்ந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் பொழுதே அந்த சொத்துகளுக்கு விலை ஏறிவிட்டது என்று தான் பொய்யாக சொத்துக்களை அடைய எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்தும் அதன் தொடர்ச்சியாக வழக்கை நடத்தி வருகிறோம் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியம் என்றும் அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.11.05 17:36:43 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்